# 15,000 மாணவர் பெரும் ஆர்ப்பாட்ட பேரணி

(யாழ்ப்பாணம்)
வங்காலையிலே பாடசாலை அதிபர்கள் கொலையைக் கண்டித்தும், பரீட்சைகள் நடத்தப்பட வேண்டும் என்று கோரியும் தமிழ் பிரதேசங்களில் நேற்று பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடாத்தினர்.

யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி தீவுப் பகுதி, கிளிநொச்சி, மன்னார் பகுதிகளில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நேற்றுக் காலை யாழ். பகுதியிலிருந்து சுமார் 15000க்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 18 ஷஃபான் 14 இதழ்: 20
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 2-3-1991

# மாணவரை காப்பாற்றுங்கள் ஐ. நா. செயலருக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]
சிறிலங்கா படைகளால் எமது தாயகத்தில் நூற்றுக் கணக்கான பாடசாலைகள் அழிக்கப்பட்டும், ஆசிரியர்களும் மாணவர்களும் கைது செய்யப்பட்டும், பின் காணாமல் போயும், பலர் கொல்லப் பட்டுமுள்ளனர். இப் பயங்கரமான நிலை இன்று வரை தொடர்ந்து கொண்டேட இருக்கின்றது.

சிறிலங்கா அரசின் ஒடுக்கு முறை நடவடிக்கைகளை சர்வ

(4-ம் பக்கம் பார்க்க)

# இந்தியநட்புறவுஒப்பந்தத்தை இலங்கை அரசு நிராகரித்தது

## - இந்தியா அதிர்ச்சி -

[புதுடில்லி]

**இந்தியாவும் - இலங்கையும் விரைவில் மேற்கொள்வதாயிருக்கும் 'நட்புறவு ஒப்பந்தத்தை' ஏற்றுக்கொள்ள இயலாதெனஇந்தியாவுக்கான இலங்கைத்தூதர் பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே தெரிவித்துள்ளார். இந்தியாவால் தயாரிக்கப்படும் ஒப்பந்தம் சரியானதொன்றல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.**

இந்த ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் இதனை கிழித்தெறிய பலர் தயாராயிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திரு கல்பகேயின்கருத்தை கண்டித்துள்ள இந்தியா இது அவரது சொந்தக் கருத்தா அல்லது இலங்கையின் கருத்தா என தெரியவில்லை என்றும் கூறியுள்ளது. (சி)

# திருமலையில்தமிழர் மர்மமாய் மறைவு

(திருமலை)
வெளிமாவட்டங்களிலிருந்து திருமலை வரும் தமிழ் இளைஞர்கள் மர்மமானமுறையில் கடத்தப்படுவதாகசெய்திகள் தெரிவிக்கின்றன.

இளைஞர்கள், குடும்பஸ்தர்களே பெரும்பாலும் கடத்தப்படுவதாகவும் இவர்களுக்கு என்ன நடைபெறுகிறது என்பது மர்மமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பலர் இதுவரை கடத்தப்பட்டும் வருகிறார்கள்.

# தாண்டிக்குளத்தில் புலிகள் கடும் தாக்குதல்

(வவுனியா)
வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் இராணுவ காவல் அரணிலிருந்து வெளியேறி வந்து பொதுமக்களை சோதனை

(4-ம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)
இராணுவத்தினருடன் கடந்த மாதம் 24-ம் திகதி மாவிட்டபுரத்தில் ஏற்பட்ட மோதலின்போது காயமடைந்த லெப். கபில் (இராசரத்தி

(4ம் பக்கம் பார்க்க)

# தமிழக தேர்தல் மே நடுப்பகுதியில்

[சென்னை]
தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் வரும் மே மாத நடுப் பகுதியில் நடைபெறுமென்று மத்திய அரசு சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்திருக்கிறார்.

காஞ்சிபுரத்தில் நேற்று செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் "மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வரும் மே மாதம் 3-வது வாரத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்

[4-ம் பக்கம் பார்க்க)

## பொம்மர் தாக்குதல்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி 5-ம் வாய்க்கால் கரடிப்போக்குப் பகுதியில் நேற்று இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் இராசையா தர்மலிங்கம் (வயது-39, அச்சுவேலி) துரைசிங்கம் கணபதிப்பிள்ளை (வயது-39) ஆகிய இருவரும் காயமடைந்

(4ம் பக்கம் பார்க்க)

# இராணுவ தொகை உயரும் அதிகாரிகள் வெளிநாடு பயணம்

(கொழும்பு)
இலங்கையில் முப்படையினரதும் தொகை இவ்வருட இறுதியில் ஒன்றேகால் லட்சமாக அதிகரிக்கப்படவுள்ளது.

இத்தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார். புதிய படையணிகளும் அமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்திற்கான பல இராணுவ - தள

(4-ம் பக்கம் பார்க்க)

# பாணில் 'ஸ்ரெப்பிளர்' பின் உண்டவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)
பாணினுள் இருந்த ஸ்ரெப்ளர் பின்கள் சாப்பிடும்போது தொண்டையில் சிக்கியதால் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாண் உண்பதற்காக பிய்த்த போது அதனுள் பல ஸ்ரெப்ளர் பின்கள் இருந்ததாகவும்

(4-ம் பக்கம் பார்க்க]

# 14,000 தமிழ் அகதிகள் வடக்கே தப்பியோட்டம்

[வவுனியா]
மன்னார் மாவட்டம் மடுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதிகள் முகாமிலிருந்து தமிழ் அகதிகள் இராணுவத்தால் விரட்டப்பட்டதை அடுத்து அங்கிருந்த 14,000க்கும் மேற்பட்டவர்கள் வடக்கு நோக்கி தப்பியோடிவந்துள்ளனர்.

இந்த அகதிகள் முகாம் ஐ. நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தினுலும் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினுலும், இந்திய அரசின் உதவியுடனும் அமைக்கப்பட்டது.

இவ்வாறிருந்தும் அங்கிருந்து தமிழ் அகதிகளை இராணுவம் நேற்று முன்தினம் வெளியேறுமாறு விரட்டியடித்தது. அப் பகுதியிலிருந்தும் மன்னாரிலிருந்

(4-ம் பக்கம் பார்க்க)

# இராணுவம் சிங்களவர் பற்றரியால் முரண்பாடு

(திருமலை)
திருமலை நகரில் படையினர் பற்றரிகள் எடுத்துச் செல்ல தடைவிதித்துள்ளதால் சிங்களவர் படையினருடன் முரண்பட்டுவருகிறார்களாம்.

கடந்தமாதம் முதல் இராணுவத்தினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இதையடுத்து அப்பகுதியில் சிங்களவர் படையினருடன் கடும் கருத்துமுரண்பாடுகள் கொண்டுள்ளதாகவும் அங்கிருந்து வந்த பலர் தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை!

(யாழ்ப்பாணம்)
ஐ. நா. செயலாளருக்கு மாணவர் அனுப்பியுள்ள கோரிக்கைகளை சிறிலங்கா அரசு நிறைவேற்றத்தவறும் பட்சத்தில் சிறிலங்காவுக்கான பொருளாதார உதவிகளையும் ஆதரவையும் இடைநிறுத்தி வைத்து சிறிலங்கா அரசு மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என சர்வதேச சமூகத்தவர்களை மாணவர்கள் கோரியுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

# இடைக்கால சபை இலங்கை ஏற்காது!

[புதுடில்லி
வடக்கு - கிழக்குப் பிரச்னைக்கு 'இடைக்கால சபை' அமைப்பதன் மூலம் தீர்வு காணலாமென இந்தியா தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

# "எமது வாழ்வியல் அமைப்பை பாதிக்காத கட்டமைப்புடைய யாழ். நகரை மீள உருவாக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரை எமது பாரம்பரியமான வாழ்வியல் அமைப்பை பாதிக்காத அளவில் கட்டமைப்பைக் கொண்ட நகராக உருவாக்க வேண்டும். அத்துடன் பெறுமானமிக்க உற்பத்தி பொருட்களை உருவாக்கும் வர்த்தக மையமாகவும் யாழ். நகர் விளங்கவேண்டும்'' என்று யாழ். பல்கலைக்கழக புவியியற் துறை தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். இந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பசுபதிச் செட்டியார் நினைவுச் சொற்பொழிவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் கே. எஸ். குகதாசன் தலைமையில் இந்த நினைவுச்சொற்பொழிவு நடைபெற்றது.

''யாழ்ப்பாண நகரம் மீள அபிவிருத்தி சில திறமுறைகள்'' என்ற தலைப்பில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

''இரு தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையில் யாழ்ப்பாண நகரி மக்கள் தொகையிலும் சேவை வசதிகளிலும் கொழும்புக்கு அடுத்து இரண்டாவது இடத்தை வகித்தது தற்போது அந்த இடத்திலிருந்து பின் தள்ளப்பட்டுள்ளது.

1977ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண நகரம் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி நகரம் பௌதீக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அழிவுக்கு உட்பட்டு இருக்கிறது.

தனியார்துறை, அரசதுறை, உள்ளூராட்சி துறை ஆகியவை ஒருங்கிணைந்து நகரை அபிவிருத்தி செய்யவேண்டும். நகரில் மக்கள் தொகையை மேலும் உள்வாங்காமல், உயர் தொழில்நுட்ப விஞ்ஞான அறிவு சார்ந்த உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றைக் கொண்ட நகராக உருவாக்க வேண்டும்.

நகரம் செயற்படாவிட்டால் பிரதேசம் செயற்படமாட்டாது. நகர் இயங்க வேண்டும். வர்த்தக மையப் பகுதியில் நகர செயற்பாட்டுக்குரிய நிலங்கள் இருக்கின்றன. ஆனால் பாதைகள். முகப்புகள் இல்லாத நிலையில் காணப்படுகின்றன. தனியார்துறையின் உதவியுடன் பாதைகளைத் திறந்துவிடவேண்டும்.

நகருக்கு குடிநீர் விநியோகத் திட்டம் தேவை அத்துடன் கழிவு நீர் வெளியேற்றம் மழை வெள்ள நீர் வெளியேற்றம் ஆகியவற்றுக்கும் தீர்வு காணவேண்டும்.

வளரும் போக்குவரத்துக்கு ஏற்ப வீதிகளை அகலமாக அமைக்கவேண்டும். யாழ். நகரிலுள்ள குளங்களை ஆழப்படுத்தியும் நல்ல முறையில் பராமரிக்கவேண்டும். நகரில் பாரிய கைத்தொழில், கூட்டுத்தாபன இடத்தை எடுக்கும் கைத்தொழில்கள் இங்கு அமைக்கக்கூடாது. நகர சுற்றுடலுக்குரிய மரங்களை நாட்ட வேண்டும். நகரம் வளர்ந்தால்தான் பிரதேசம் வளரும்'' என்றார். (153)

## ஏப்ரலில் பரீட்சைகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை ஏப்ரல் மாதம் 22ம் திகதி தொடக்கம் மே மாதம் 15ம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

இதேசமயம் க. பொ. த. (சாதாரண) பரீட்சையும் ஏப்ரலில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பொம்மர் மூலம் பத்திரிகை பார்சல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மூன்றும்வாய்க்காலில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பொம்மர் தாக்குதலின் போது பொம்மர் விமானமொன்று கொழும்பு பத்திரிகை பார்சல் ஒன்றையும் வீசியது. (83)

## லொறி விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தக நிறுவனமொன்றுக்கு சைக்கிள் உதிரிப்பாகங்களை ஏற்றிவந்த லொறியொன்று நொச்சிமோட்டை பாலத்தில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது. சாரதியும் கிளீனரும் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர். லொறி முற்றாகச் சேதமடைந்துள்ளது. [எஸ்]

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

அடைவு கடைக்குரிய இரும்புக் கூடும், இரும்புப் பெட்டியும் விற்பனைக்குண்டு. காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை தொடர்பு கொள்ளவும். 149/2. கஸ்தூரியார் வீதி, (ரெலெக்ஸ் பேக்கரி முன்பாக) யாழ்ப்பாணம்.

(சி-4403)

### கலண்டர்கள், டயறிகள்

இவ்வாண்டுக்கான கலண்டர்கள், டயறிகள், பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, மின்சார நிலையவீதி, (பிறவுன்ஸ்கம்பெனி அருகில்) யாழ்ப்பாணம்.

(எ-1116)

### மீரா வெளியீடுகள்

வித்தியாசமான கதைகளின் கருத்தில், கன்னித்தமிழ் உரையாடல்களில் சிறந்த நாவல்கள், தலைசிறந்த எழுத்தாளர்கள் எழுதியது. துர்க்காஸ்ரேசனேரிஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவச்சேரி. பிக்பெஸ்ட் (B) கிளிநொச்சி யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும்.

(சி 4391)

### கோட் சூட்

திருமண கோட், சூட், வேஸ்ட் கோட் யாவும் எமது கைதேர்ந்த மாஸ்டர் கட்டரால் தற்கால நாகரீகத்துக்கு ஏற்றமுறையில் தைத்துத் தரப்படும் ஜெகபதி காம்ரெக்ஸ், அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்.

(சி 4401)

### புத்தகம்

சத்திய சாயிபாபா கூறிய படி அவருடைய முந்திய அவதாரம், ஷிர்டி சாயிபாபா வாழ்க்கை சரித்திரம். கிடைக்குமிடம் ஞானயகம். 388/1 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4408)


# 41 மாணவர்கள் இரத்தம்வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள இரத்தவங்கிக்கு நேற்றுமுன்தினம் 41மாணவர்கள் இரத்தம் வழங்கியுள்ளனர்.

வட்டுக்கோட்டை யாழ். கல்லூரி லியோ கழகத்தைச் சேர்ந்த 41 மாணவர்களே தற்சமயம் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தத்தட்டுப்பாட்டை நீக்கியுள்ளனர்

பல தரப்பட்ட குறூப் இரத்தங்கள் கிடைத்துள்ளதாக உத்தியோகத்தர் ஒருவர்தெரிவித்தார். (56)

## 150 ஊழியர் ஓய்வுபெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் பல்வேறு தரங்களில் கடமையாற்றிய 150 ஊழியர்கள் சுய விருப்பத்தின் கீழ் இளைப்பாறியுள்ளனர்.

சுய விருப்பத்தின் கீழ் இளைப்பாறிய 35 பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகளுக்கும் மீளவும் யாழ். பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நிருவாகத்திலுள்ள ஆளை பத்திரிகளில் மீள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (153)

# யாழ். வைத்தியசாலைக்கு பணிப்பாளர் திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் குழந்தைகள் சிகிச்சை நிலையத்திற்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், மற்றும் வைத்திய அதிகாரியும் திடீரென விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

குழந்தைகளுக்கு ஏற்றப்பட்டு வரும் போலியோ தடுப்பூசி மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்குரிய ஒழுங்குகளை ஏற்படுத்தவே இத்திடீர் விஜயத்தை மேற்கொண்டனர்.

தற்சமயம் வழங்கப்பட்ட குறிப்பிட்ட ஊசி மருந்துகள் 1000 குழந்தைகளுக்கே போதுமானதாக உள்ளதாலும். ஒரு நாளைக்கு சிகிச்சைநிலையத்தில் நூறு குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்படுவதனாலும், இன்னும் சில தினங்களுக்கே கையிருப்பில் உள்ளதாலும் மேற்கொண்டு மருந்துவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகிறது. (56)

## நினைவுச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழக ஏற்பாட்டில் அமரர் பொ. ச. குமாரசுவாமி நினைவுச்சொற்பொழிவு திரு. ந. சபாரத்தினம் தலைமையில் நல்லூர் கம்பன் கோட்டத்தில், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் ''பாடசாலை நிர்வாகம் - இலட்சியமும் நடை முறையும்'' என்னும் தலைப்பில் திரு. ச பூரணம்பிள்ளை நினைவுச்சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

## யாருடையது?

இராசையா கமலாம்பாள் (யாழ்ப்பாணம்), செல்வரத்தினம் ரவீந்திரன் (கோண்டாவில்) திருமதி முத்துப்பிள்ளை முருகேசம்பிள்ளை (சண்டிலிப்பாய்), சந்தையா உதயகுமார் (கிளிநொச்சி) ஆகியோரின் அடையாள அட்டைகள் அன்பர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு தபால் மூலம் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஈழநாடு அலுவலக நேரத்தில் நேரில் வந்து அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு தாய் தனது பிள்ளைகளை சைக்கிளில் கூட்டிச் சென்றபோது சேரதீவு வழியாக வந்த லொறி சைக்கிளுடன் மோதியதில் சைக்கிளில் வந்த தாயும் மகளும் படுகாயமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவற்குழியைச் சேர்ந்த திருமதி செல்வதி பாக்கியநாதன் (29 வயது), மகள் ராஜி (7 வயது) ஆகியோரே காயமுற்றவர்களாவர் லொறியும் சாரதியும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் (56)

## பொதுசன உதவிப்பணம்

(தெல்லிப்பழை)

காங்கேசன்துறை, தெல்லிப்பழை தபால் நிலையங்களில் இம்மாதம் 4ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படவிருக்கிறது.

இம்முறை பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் அட்டை உலர் உணவு விநியோகத்துக்கான அனுமதி அட்டை, தேசிய அடையாள அட்டை, குடும்பப்பதிவு அட்டை. வறுமை நிவாரண அட்டை ஆகியவற்றை அவ்வப்பிரிவு கிராமசேவை அலுவலகரிடம் சமர்ப்பித்து அவரிடமிருந்து பெறப்படும் கடிதத்திற்கு மட்டுமே உதவிப்பணம் வழங்கப்படவிருக்கிறது.

## நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

தொழில் இழந்தவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

தொழில் இழந்தவர்கள் ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தாட்சியைத் சமர்ப்பித்து இந்த நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்ளும்படி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (56)

# கைதடியில் நடைபெற்ற "ஒரு புலரும் பொழுது"

(யாழ்ப்பாணம்)

கைதடி சரஸ்வதி கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'ஒரு புலரும் பொழுது' என்னும் தலைப்பிலான பௌர்ணமி விழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

சரஸ்வதி மாணவர் இலக்கிய அவைத் தலைவர் செல்வி கே. யமுனா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சமகாலப் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்ட பாடல்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டன.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட 25 விவசாயிகளுக்கு மண்வெட்டி, கடகம் போன்ற விவசாய உபகரணங்களும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் இவ்விழாவில் வைத்து வழங்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை, 'வங்கி நடைமுறைகள்' பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. திரு. வி கே. ஸ்ரீதரன் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுவார்.


## தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு

**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

★ கொம்பியூட்டர் பயிற்சி (COMPUTER PROGRAMMING BASIC)
60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். — காலம் 4 மாதம்

★ றேடியோ, ரெலிவிஷன் வீடியோ டெக் றிப்பியறிங்
சகல இன றேடியோ, ரெலிவிஷன் வீடியோ டெக் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். —காலம் 4 மாதம்

★ றீ வைண்டிங்
மின் மோட்டார், மின்விசிறி, ரான்ஸ்போமர் டைனமோ றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும் —காலம் 4 மாதம்

★ எலக்ரிக்கல் வயறிங்
வீட்டு மின்சார வேலை, மின்சாரப்பொருட்கள் திருத்தல் பயிற்சியளிக்கப்படும் —காலம் 2 மாதம்

★ எயர்கொண்டிசன் றிப்பியறிங்
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும் —காலம் 4 மாதம்

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP — காலம் 4 மாதம்

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:
01-03-1991 (கிழமை நாட்கள்)
03-03-1991 (சனி, ஞாயிறு)

குறிப்பு: சித்தியடையும் மாணவர்களுக்கு பெறுமதிவாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

(ஏ 1117)

நுவரெலியா

## தமிழ் பாடசாலைகளுக்கு சிங்கள சுற்றிக்கை!

(மாங்குளம்)

நுவரெலியா கோட்டக்கல்வி காரியாலயத்திலிருந்து தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சகல சுற்றறிக்கைகளும் தனிச்சிங்களத்திலேயே இருக்கின்றன.

பெரும்பான்மையான தமிழ்ப் பாடசாலைகளையும், தமிழ்மாணவர்களையும் கொண்டு இயங்கும் இக்கோட்டக் கல்விக் காரியாலயத்தில் தமிழ் தட்டச்சுக்கூட இல்லாதவேளை ஏனைய மொழிக்குரிய தட்டச்சு இயந்திரங்கள் தேவைக்கும் அதிகமாக இருப்பதாகவும், தமிழ் தட்டச்சு இயந்திரதேவை குறித்து பலமுறை எடுத்துக்கூறியும் கவனத்தில் அவை எடுத்துக்கொள்ளப்படவில்லை எனத் தெரிகிறது. (150)

## யாழ்ப்பாணத்தில் முத்தமிழ் விழா

# கலைஞர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் கலாசார பிரிவினர் நடத்தும் முத்தமிழ் விழாவில் பங்கு கொள்ள விரும்பும் இசை, நடன, நாடகக் கலைஞர்கள் இம்மாதம் 10-ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

நடன நிகழ்வில் பரதம், கதகளி, உழவர் நடனம், மீனவர் நடனம், கும்மி, கோலாட்டம், காவடி, கரகம் என பல்வேறு வகைப்பட்டதாகவும், இவை ஒவ்வொன்றும் 7 நிமிடங்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.

நாட்டிய நாடகம் 45 நிமிடங்களுக்கு மேற்படாததாக இருத்தல்வேண்டும்.

சமூக மேம்பாடு, போராட்டச் சிந்தனைகள் மூலம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியை ஆதாரமாகக் கொண்ட கதைகள், கற்பனைகள் மூலம் உருவாகும் பாடல்களுக்கு அமைவாக நடன, நாட்டிய, நாடக நிகழ்வுகள் இருப்பது விரும்பத்தக்கது.

நாடகங்கள் இசை நாடகங்களாகவும், கூத்து வகைப்பட்டதாகவும், நவீன நாடகங்களாகவும், வரலாற்று நாடகங்களாகவும் இடம் பெறலாம்.

நாடகங்கள் 30 நிமிடம் தொடங்கி 45 நிமிடம் வரையில் இடம்பெறும் வகையிலும், ஒரு மணிநேர நாடகமாகவும் இரு பிரிவாக இடம் பெறலாம்.

நிகழ்ச்சிகளில் பங்கேற்க விரும்பும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் மற்றும் பிரதிகள் யாவும் முத்தமிழ் விழாப் பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப் பிரிவு, கோண்டாவில், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இம்மாதம் 10-ம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கப்படுதல்வேண்டும்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த கலைஞர்கள் தத்தம் மாவட்ட மக்கள் முன்னணிச் செயலகங்கள் மூலம் அனுப்பி வைக்கலாம்.

தெரிவுசெய்யப்படும் நிகழ்ச்சிகளுக்கு பிரயாண வசதிகளுடன் அனைத்து உதவிகளும் வழங்கப்படும்.

## தமிழ் சீர்திருத்த எழுத்துக்களை

# நடைமுறைப்படுத்துமாறு திணைக்களங்களுக்கு பணிப்பு

(மானிப்பாய்)

அரச திணைக்களங்களில் சீர்திருத்திய தமிழ் எழுத்துக்கள் பதின்மூன்றையும் உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அரசாங்க மாகாண உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்கள், அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள அரசாங்க நிர்வாக சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசாங்கத்தின் கீழுள்ள அமைப்புக்கள் யாவும் இனிமேல் அவற்றின் பெயர்ப்பலகைகள் அறிவிப்புப் பலகைகள் போன்றவற்றிலும் பொதுமக்களிடமும் அரசாங்க முகாமைகளுக்கிடையிலும் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளும்போது திருத்திய எழுத்துக்களையே பயன்படுத்தவேண்டும்.

★ கல்வியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள பிள்ளைகளுக்கும் புதிய எழுத்துக்கள் உடனடியாக அறிமுகப்படுத்தல் வேண்டும்.

★ பழைய எழுத்துக்கள் அச்சிட்ட நூல்கள் பயன்படுத்தப்படலாம். அதே நேரத்தில் 13 எழுத்துக்களின் செய்யப்பட்டுள்ள திருத்தங்களுக்கும் மாணவர்களின் கவனத்தை ஈர்த்தல்வேண்டும்.

★ எழுதும் நோக்கங்களுக்குப் புதிய எழுத்துக்களைப் பயன்படுத்துவதற்கு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுதல்வேண்டும்.

★ புத்தகங்களை அச்சிடும் போதும் பாடப் புத்தகங்களை மறுபதிப்புச் செய்யும்போதும் திருத்திய எழுத்துக்கள் பயன்படுத்தப்படுதல்வேண்டும்.

★ திருத்திய எழுத்துக்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படும் அதேவேளையில் பழைய எழுத்துக்களைப் பயன்படுத்துபவர்களை 3 வருடங்களுக்கு எந்தவிடத்திலாவது தண்டிக்கக்கூடாது. அதன் பின்னர் மீளாய்வு செய்யப்படும். (71)

## பத்திரிகையாளருக்கு டிப்ளோமா பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

பத்திரிகைத்துறையில் உள்ளவர்களுக்கு டிப்ளோமாப் பயிற்சி அளிக்கத் திறந்த வெளிப் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துவருகிறது. தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழி மூலம் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி, க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாமெனத் தெரிய வருகிறது. (152)

## யாழ். ஆஸ்பத்திரியில் வைத்தியர்கள் பற்றுக்குறை; நோயாளிகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் வெளி நோயாளர் பகுதியில் தினமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் நிரம்பி வழிந்தபடி உள்ளனர். எதுவித போக்குவரத்து வசதியில்லாத நிலையிலும் இவ்வளவு பெருந்தொகையான நோயாளிகள் பலவிதகஷ்டங்கட்கு மத்தியில் வருகை தருகின்றனர்.

சுமுகமான நிலையில் இவ்வளவு பெருந்தொகையான நோயாளிகளில் அறுபது வீதமானவர்களே சிகிச்சை பெற்றுக்கொள்ள வருவது வழக்கம். காலை ஒன்பது மணிக்கிடையில் வெளிநோயாளர் பகுதியில் சுமார் எழுநூறு நோயாளர்கள் வந்து குவிந்து விடுவர்.

இவ்வளவு நோயாளிகளையும் வைத்தியர்கள் பார்த்து முடிவதற்கு பன்னிரண்டு மணிக்கு மேல் செல்லும்.

சிலசமயங்களில் வைத்தியர்கட்கே தர்மசங்கடமான நிலையும் தோன்றும். தற்சமயம் வெளிநோயாளர் பிரிவில் போதியளவு வைத்தியர்கள் இல்லாதது பெரும் கவலைக்குரியது. எட்டு வைத்தியர்கள் எழுநூறு நோயாளிகளைப் பார்க்கவேண்டிய நிலையில் நான்கு டாக்டர்களே இவ்வளவு நோயாளிகளையும் பார்வையிட்டு வருகின்றனர்.

மிக முக்கியமான நோயாளிகள் மட்டும் பெரியாஸ்பத்திரியில் வெளிநோயாளர் பகுதிகளில் சிகிச்சை பெற்றுக்கொள்வார்களேயானால் பல சிரமங்களை எதிர்நோக்குவதை தவிர்த்துக் கொள்ளலாம். காலதாமதமும் வீணாகாது. (56)

## இராசிபலன்

02-03-1991

சனிக்கிழமை

மேடம்: தொழில் வகை உற்சாகம், மனை மகிழ்ச்சி, உறவினர் பாராட்டு.

இடபம்: மனக் கலக்கம், தொழில் பாதிப்பு, வாக்கு வன்மை, செலவு.

மிதுனம்: குடும்பக் கஷ்டம், காரிய அலைச்சல், அயலவர் பகை.

கடகம்: பெரியோர் நட்பு, தவறான நடவடிக்கை, தொழில் லாபம்.

சிங்கம்: அகால போசனம், பணியாள் துன்பம், மனக் குறை.

கன்னி: வீட்டில் சுபகாரியம், தயாள சிந்தை, சகோதரர் உதவி.

துலாம்: சுபகாரியச் செலவு, பயணங்களால் அலைச்சல், அதிகார மேன்மை.

விருச்சிகம்: அற்பர் நேசம், காரிய சித்தி, தொழில் பாராட்டு.

தனுசு: இனியவை கூறல், விவேகமான செயல், குடும்ப ஒற்றுமை.

மகரம்: குடும்ப வேற்றுமை, மாமியார் தொல்லை, காரியத் தாமதம்.

கும்பம்: அதிக யோசனை. கடன் வசூல், தொழிற் சிறப்பு, ஆலய தரிசனம்.

மீனம்: தொழிற் சிறப்பு: கற்பனை மிகுதி, புத்திரர் மகிழ்ச்சி, பொதுப் பணி.

ஜோஸ்யர்

## ஆங்கில சாதனை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1989/90 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் தெரிவான மாணவர்களுக்கான ஆங்கில சாதனைப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறுமென யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

## மடுமாதா தேவாலயத்திலிருந்து

# 9,500 தமிழ் அகதிகளை வெளியேற்ற முயற்சி

(கொழும்பு)

மடு மாதா தேவாலயத்தில் தங்கியிருக்கும் சுமார் 9,500 தமிழ் அகதிகளை உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு கோரும் துண்டுப் பிரசுரங்கள் நேற்று ஹெலியிலிருந்து அப்பகுதியில் போடப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோரும், இப்பகுதியில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களும் இப்பகுதியை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (க)

## மட்பாண்ட கூட்டுத்தாபன

# ஊழியர்கள் இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பு

(யாழ்ப்பாணம்)

ஓட்டுசுட்டான் மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் 60 ஊழியர்களுக்குக் கொடுத்த இடமாற்றத்தை அந்த 60 பேரும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர்.

தங்களுக்குரிய 9 மாதச் சம்பளத்தை வழங்குவதற்கு முயற்சியெடுக்கும்படியும், இடமாற்றத்தை ரத்துச்செய்யக் கோரியும், இடமாற்றம் பெறாத ஊழியர்கள் தொடர்ந்து வேலை செய்வது போல் தங்களையும் வேலைசெய்ய அனுமதிக்கவேண்டுமெனவும் கூட்டுத்தாபன முகாமையாளர், மற்றும் அதிகாரிகளிடமும் தமது வேண்டுகோளை சமர்ப்பித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்துப் பேச்சு நடாத்த கூட்டுத்தாபனக் குழு கொழும்பு செல்லவுள்ளனர். (56)

## பருத்தித்துறை இலங்கை வங்கியில்

# இன்று 687 குடும்பங்களுக்கு ரூ. 4000 நிவாரணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் இன்று 2-ம் திகதி சனிக்கிழமை சுயதொழில் பாதிப்படைந்தவர்களுக்கான நிவாரணம் 4000 ரூபா 687 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பருத்தித்துறை இலங்கை வங்கி அறிவித்துள்ளது.

கெருடாவில் தெற்கு, குடத்தனை கரையூர், குடத்தனை, மருதங்கேணி ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 687 குடும்பங்களே 2-ம் திகதி இந்நிவாரணத்தைப் பெற்றுக்கொள்கின்றன.

ஏனைய கிராமசேவை அலுவலர் பிரிவுகளுக்குரிய நிவாரணம் பற்றி பின்னர் அறிவிக்கப்படுமென்றும் வங்கி அறிவித்துள்ளது. (52)

## அன்னையர் முன்னணி அரசும் அமைக்கிறது

[கொழும்பு]

ஐ. தே. கட்சியின் மகளிர் பிரிவு 'அன்னையர் முன்னணி' ஒன்றை எதிர்வரும் 8 ம் திகதி அமைத்து பொதுக்கூட்டமொன்றையும் நடாத்தவுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆதரவில் 'அன்னையர் முன்னணி' அமைக்கப்பட்டு அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்ததும் அதற்கு நாடுதழுவிய ஆதரவு கிடைத்துள்ளதும் தெரிந்ததே.

தெற்கே ஜே. வி. பியினரால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களை கொண்டே ஐ. தே. கவின் 'அன்னையர் முன்னணி' அமைக்கப்படவுள்ளது. (ஐ)

## உணவு வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் இவ்வருடத்திற்கான உணவு ஒப்பந்தக்காரர் நியமிக்கப்படாததினால் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் வார்ட்டில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கும், வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கும் சமைத்த உணவு வழங்கப்படவில்லை. (72)

# சோவியத் வான் பிரதேச பாதுகாப்பில் மறுசீரமைப்பு

(மாஸ்கோ)

சோவியத் யூனியன் வான் பிரதேச பாதுகாப்பு குறித்து பல மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. இது தொடர்பான எச்சரிக்கை ஒன்றை சோவியத் விமானப்படை தளபதி விடுத்துள்ளார்.

வளைகுடாயுத்தத்தில் ஈராக்கினால் தனது வான்பிரதேசத்தில் எத்தகைய பாதுகாப்பினையும் மேற்கொள்ள முடியாது போனதால் பன்னாட்டுப்படையின் கை ஓங்கியதற்கு முக்கிய காரணம் என்றும் அவர் கூறினார்.

பன்னாட்டு படையின் யுத்த முறை குறித்து சோவியத் படிப்படியாக நுணுக்கமாய் ஆராய்ந்து வருவதாகவும் சோவியத் வான்பாதுகாப்பு முறையில் சில குறைபாடுகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

# தாண்டிக்குளத்தில் துப்பாக்கிச்சூடு

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவம்நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் ஒருவர் காயமடைந்தார்.

இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தையடுத்து இப்பகுதியில் நின்ற கொழும்பு யாழ். பிரயாணிகள்மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து வவுனியா சென்று பொருட்களுடன் திரும்பிய சிலவியாபாரிகள் இராணுவத்தால்கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்று அவ்விடத்திலிருந்து வந்த கொழும்புப் பயணி ஒருவர் தெரிவித்தார். [56]

## தமிழீழத்தில் ஒலித்த மாணவர் கோஷங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் கல்வியை அழிக்க சிங்கள அரசுமாபெரும் திட்டம், சிங்கள அரசின் கொடுமையைக் கண்டு உலக மாணவர்களே பொங்கி எழுங்கள், தமிழீழ மாணவர்களே ஒன்று சேருங்கள் தமிழீழப் போருக்குத் தோள்கொடுத்து நிற்போம், படுவான்கரையில் மாணவர் படுகொலை பாசிச அரசின்கொலைவெறியாட்டம், சிங்கள பாடசாலையில் உயர் தரப் பரீட்சை தமிழீழப் பாடசாலைகள் மீது பீப்பாக் குண்டு, தென்னிலங்கையில் புதிய கல்விக்கூடத் திறப்பு விழா தமிழீழத்தில் தமிழ் கல்விக்கூடம் குண்டு வீச்சில் தகர்ப்பு, தென் தமிழீழ மாணவர் படுகொலை வடக்கில் மாணவர் குரல்வளை நெரிப்பு, நிலையான தமிழீழம் உருவாகும்வரைக்கும் தமிழீழ மாணவர் களம் நோக்கிப் பாய்வர், தென் தமிழீழ மாணவர் காட்டில் சிங்கள, முஸ்லிம் காடையர் நாட்டில், பொருளாதார முற்றுகையை உடைப்போம் முனைப்புடன் உற்பத்திப்புரட்சியில் இறங்குவோம், பள்ளி அழிந்தாலும் படிப்பைத் தொடர்வோம், பரீட்சையை நடாத்துஇல்லையேல் தமிழீழம் பரீட்சையை நடாத்தும், பதுங்குகுழியிலும் பாடம்படிப்போம் தமிழீழ தேசத்தை கட்டி வளர்ப்போம், விஷப் பரீட்சைய நிறுதது பரீட்சையை நடாத்து, அந்நிய மண்ணிலான பரீட்சை இன அழிப்புக்கு ஓர் அழைப்பு, பரீட்சையை நடாத்து பாதுகாப்பை உறுதிசெய், எங்கள் மண்ணில் படிப்பு அந்நிய மண்ணிலா பரீட்சை, பாராளு மன்றத்தில் அடிதடி, பாடசாலைகளில் குண்டு வீச்சு ஜனநாயகம் இரத்தக்கண்ணீர், சர்வதேசத் தொண்டர் அமைப்புக்களே இன அழிப்புக்கு நீங்களும் உடந்தையா? எங்களுக்கான பரீட்சையை எமது மண்ணில் நடாத்து, சர்வதேச மாணவ அமைப்பே உனது காதும் செவிடா? என்பன மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணியின் கோஷங்களாக அமைந்திருந்தன. (56-153)

### மாணவரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேச சமூகம் கண்டிப்பதுடன் எமது கோரிக்கைகளை சிறிலங்கா அரசு நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தவும் வேண்டுமென்று யாழ் மாவட்ட மாணவர் ஒன்றியம் மகஜர் மூலம் ஐக்கிய நாடுகள் சபை செயலாளரைக் கேட்டுள்ளது;

மேற்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள 8 அம்சக்கோரிக்கைகள் வருமாறு;

★ சிறிலங்கா அரசுதமிழீழத்தில் தொடர்ச்சியாக நடாத்தும் விமானத்தாக்குதல்களை அழிப்பை நிறுத்தவேண்டும்.

★ குறிப்பாக தமிழீழப் பிரதேசத்திலுள்ள கல்வி நிறுவனங்கள் மீதான திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டும்

★ தமிழீழப் பாடசாலைகளில் முகாமிடப்பட்டுள்ள சிறிலங்காப் படைகள் பாடசாலைகளிலிருந்து வெளியேற்றப் படவேண்டும்.

★ தென் தமிழீழத்தில் ஆசிரியர்கள், மாணவர்களின் உயிருக்கும் உடமைக்குமான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு அவர்கள் அங்கு சுமுகமாகக்கல்வி கற்பதற்கானசூழ்நிலையை ஏற்படுத்தல்வேண்டும்;

★ கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் உரியஇடத்தில் வசதிகளுடன் இயங்குவதுடன் விரிவுரையாளர்கள் மாணவர் ஊழியர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

★ அதிபர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரைக் கைதுசெய்தல் கடத்துதல், கொலைசெய்தல் ஆகியவற்றை நிறுத்தி அவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தவேண்டும்:

★ பொருளாதார எரிபொருள் தடைகளை நீக்கி ஆசிரியர்கள், மாணவர்களினது போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல் வேண்டும்.

★ சிறிலங்கா அரசு திட்டமிட்டு காலதாமதப்படுத்தி வரும் பரீட்சைகளான [5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க. பொ. த [சாதாரணம்] பரீட்சை, க. பொ. த. [உயர்தரம்] பரீட்சை, ஆசிரிய கலாசாலைப் பரீட்சைகள்] எமது பிரதேசத்தில் உடன் நடாத்துதல் வேண்டும் (153)

### பொம்மர் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்;

சில கட்டிடங்களும், வாகனங்களும் பலத்த சேதம் அடைந்தன. காலை 11 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது (83)

### இலங்கைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை சர்வதேசம் சிறிலங்காவுக்கு வழங்கும் பொருளாதார உதவிகள் சிறிலங்கா அரசு தமிழ்மக்கள்மீது ஓர் இனப்படுகொலையை நடத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்றும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (153)

### 14,000

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் தொடர்ந்தும் மக்கள் வெளியேறிவருகின்றனர்.

### இந்தியா கண்டனம்

(புதுடில்லி)

மடுஅகதிகள் முகாமிலிருந்து தமிழரை இராணுவம் வெளியேற்றியுள்ளது குறித்து இந்தியா அதிர்ச்சிடைந்துள்ளது. இது குறித்து கண்டனமும் தெரிவித்துள்ளது.

அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடாத்துவது மனிதாபிமானமற்ற செயல் என்றும் இந்தியா கூறியுள்ளது (சி)

### 15,000 மாணவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட மாணவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட எழுச்சிப் பேரணியை நடாத்தி தங்களது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து 9 மணிக்கு ஆரம்பமான இவ்ஊர்வலம் பலாலி வீதி, மேஜர் கணேஸ்வீதி நல்லூர் வீதி, பருத்தித்துறை வீதி, கச்சேரி- நல்லூர் வீதி, யூடாக யாழ். செயலகம் வந்தடைந்தது.

இந்த ஊர்வலத்தின் போது யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கத்திடம் மாணவர் ஒன்றியத்தின் மகஜர் கையளிக்கப்பட்டது. அதை தொடர்ந்து கச்சேரி நல்லூர்வீதி வழியாக யாழ். செயலகத்தை நோக்கி பேரணி புறப்பட்டது. யாழ். செயலகத்தின் வாசலில் யாழ். மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது;

யாழ். கோயில் வீதியில் உள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முக்கிய பிரதிநிதியிடம். மாணவர் பிரதிநிதியினால் மகஜர்கையளிக்கப்பட்டது. மகஜரை ஏற்ற செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதி "இலங்கை அரசினால் ஏற்படும் தமிழர் பிரச்சனையிலும், தமிழ் மாணவர் பிரச்சனையிலும் தலையிடக்கூடாதென்று தங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இவ்வேளையில யாழ். நகர் பண்ணைப் பகுதியில் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன; அப்போதும் மாணவர்கள் உரத்த குரலில் சுலோகங்களை எழுப்பியவாறு காணப்பட்டார்கள்.

பேரணி செயலகத்தைச் சென்றடைந்தபின்னர் கண்டி வீதி, கோயில் வீதி, நச்சார் வீதி, புவனேந்திரன் வீதி. ஸ்ரான்லி வீதி வழியாக ஆரிய குளம்சந்தியையடைந்து திரும்பவும் பலாலி வீதியூடாக யாழ். பல்கலைக் கழகத்தை சென்றடைந்தது; அங்கு கூட்டம் நடைபெற்றது.

இப்பேரணிக்கு தனியார் கல்வி நிலைய ஒன்றியம், பல்கலைக்கழக மாணவர்கள், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன முழுமையான ஒத்துழைப்பை வழங்கின. (56-153)

## தமிழீழம் வெளிவந்துவிட்டது

(யாழ்ப்பாணம்)

தமிழீழவிடுதலைப் புலிகளின் வெளியீடான 'தமிழீழம்' சஞ்சிகையின் குறள்-22 வெளிவந்துள்ளது; இச்சஞ்சிகையில் தமிழர் பொருளாதாரம், பெண்விடுதலை அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டம் என்றதலைப்பிலான கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளது. (வி)

### தாண்டிக்குளம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்த புளொட் உறுப்பினர் மீதும் இராணுவம்மீதும் விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

இத்தாக்குதலை தொடர்ந்து முகாமிலிருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார். (க-வி)

### வீரமரணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னம் இராசபாண்டியன், பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளி) நேற்றுமுன்தினம் வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்; (க-வி)

### பாணில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை நீக்கிவிட்டு உண்டபோதும் அவரது தொண்டையில் வேறு பின்கள் சிக்கி மிகவும் அவதிப்பட்டு நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலணை புளியங்கூடல் சின்னமடுவைச் சேர்ந்த சுவாமி வியோ (28 வயது) என்பவரே இவ்வாறு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

### இராணுவ தொகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடங்களையும் கொள்வனவு செய்ய இராணுவ அதிகாரிகள் சிலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

### 3-வது டெஸ்ட்

## இலங்கை-326

[வெலிங்டன்]

நியூஸிலாந்துக்கும். இலங்கைக்குமிடையில் நியூஸிலாந்தில் நடைபெறும் 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதலாம் நாள் ஆட்டத்தில் இலங்கைக் கோஷ்டி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றது. வீரர் அரவிந்த டி சில்வா 96 ஓட்டங்களைப் பெற்றார்;

முதலாம் நாள் ஆட்டம் முடிவடையும்போது, நியூஸிலாந்து 114 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்தது; [வி]

### இராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்;

பற்றரிகள் எடுத்துச்செல்லும் தமிழர் பலர் கடுமையாகத் தாக்கப்பட்டுமுள்ளனர்.

## மகளிர் எழுச்சி நாள்

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக மகளிர் நாளான 8ம் திகதியை தமிழீழ பெண்களின் எழுச்சிநாளாக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி கொண்டாடவுள்ளது: (வி)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டரி இளைஞர் ஒன்றியம், எதிர்வரும்9ம் திகதி கத்தோலிக்க மாணவர்களுக்கிடையில் கருத்தரங்குஒன்றை நடாத்தவுள்ளது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் காலை முதல் மாலை வரை நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சந்திரகாந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார், (வி)

## காகிதாதிகள் தட்டுப்பாடு

(மாங்குளம்)

கிளிநொச்சி, மாங்குளம் இலங்கை வங்கிக் கிளைகளில் போதிய ஆவணங்கள் காகிதாதிகள் இன்மையால் இவை முழுமையாகச் செயற்பட முடியாதிருப்பதாக வங்கி வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்பட்டன

தலைமை அலுவலகம் போதிய ஆவணங்களை அனுப்பிவைத்தால் வங்கி வாடிக்கையாளருக்கு பூரண சேவையையாற்ற முடியாருப்பதாக சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். [150]

### தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட புதிய அரசு பதவியேற்கும் வகையில் தேர்தல் நடாத்தப்படவேண்டுமென்று தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு மத்திய சட்டத்துறை கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிவித்தார்;

# பரீட்சை நடாத்த யாழ். திணைக்களம் தயார்

[யாழ்ப்பாணம்]

பரீட்சை ஆணையாளரின் பணிப்புரை வந்தவுடன் யாழ்: கல்வித்திணைக்களம் 1990-ம் ஆண்டு பரீட்சைகள் நடத்துவதற்கு ஆயத்த நிலையிலுள்ளது";

இவ்வாறு யாழ் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம்தெரிவித்தார். "அதற்கு முன்னோடியாக மேற்பார்வையாளர்கள், நோக்குநர்களின் பெயர்களை இவ்வாரத்துக்குள் கொழும்புக்குத் தெரிவிக்க இருக்கிறேன். அங்கிருந்து முடிவுகள் வந்தவுடன் யாழ் மாவட்டத்தில் பரீட்சைகள் நடாத்தப்படும்" என்றார்.

பரீட்சை குறித்து மேலும் ஆராய வடக்கு-கிழக்கு கல்விப்பணிப்பாளர்கள் 9ம் திகதி கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். [152]

### இடைக்கால

(1-ம் பக்கம் பார்க்க)

வித்த யோசனையை இலங்கை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

தற்போதைய சட்டத்தின் கீழ் இடைக்கால சபை என்னும் இந்தியாவின் யோசனை ஏற்க இயலாதென அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் பிரச்னைக்கு தீர்வாக தற்காலிக மாகாண சபை அமைக்கலாமென்றும் இது இடைக்காலசபை என்பதால் பழைய மாகாணசபை எனப்பொருள்படும் என்றும் இந்திய தூதர் திரு. என். என். ஜா புதிய யோசனை கூறியுள்ளார். (கி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் மேற்கு வீதி, 68ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number D/[illegible]